**செய்தி வெளியீடு எண் : 2292** **நாள் : 17.11.2023**

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை</u>

நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் பால் பண்ணை மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலை 89.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவும் பணியை தேசிய பால் வள வாரியத்திடம் ஒப்படைக்க தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு அனுமதி அளித்து அரசால் 16.11.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பால் கூட்டுறவுகளுக்கான பால் உள்கட்டமைப்புத் திட்டச் செயல்பாட்டில் தேசிய பால்வள வாரியத்தின் தனித்தன்மையைக் கருத்தில் கொண்டு, "நாமக்கல்லில் 2 LLPD ஹைடெக் பால் பண்ணையை நிறுவுதல்" என்ற திட்டம் தேசிய பால்வள வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தின் பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார உயர்வு ஆகியவற்றை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். நுகர்வோரின் எதிர்கால தேவையை பூர்த்தி செய்வதற்கும் பால் பதப்படுத்துதலை விரிவுபடுத்துவதற்கும் இத்திட்டம் மிகவும் அவசியமானது.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**
**கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in